சோதிக்கப்படுதல்

DEREK PRINCE

Derek Prince Ministries - India

"SODHIKKAPPADUDHAL"

Originally published in English under the title
"TESTING"

Published by Derek Prince Ministries - India
http://www.nz.derekprince.com/india

TA/10-03/3000/SR
ISBN 81-87858-77-X

Published by permission in the Tamil language.
Translated into Tamil language by
MR. G. SAMUEL KARUNAKARAN

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
18/32 Mangammal Salai, Renganagar,
Trichy - 620 021,
Tamil Nadu, S.India.
E-mail: r_m_c@vsnl.com
Phone : 00-91-431-2459464 / 2457181
Fax: 00-91-431-2459564

Cover Design - Elsie Daniel - DPM India.

Derek Prince Ministries
http://www.derekprince.com

சோதனையின் நோக்கம்

மனுஷனை... காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும் அவனைச் சோதிக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்?" (யோபு 7:17, 18)

தேவன் தினமும் காலையில் நம்மை விசாரிப்பதும் நிமிஷந்தோறும் நம்மை சோதிப்பதும் ஒரு வியக்கத்தக்க வெளிப்பாடு இல்லையா? முதல் முறையாக எனது வாழ்க்கையில் உண்மையாக இது நிகழ்ந்தபோது என்னை நானே கேட்டுக் கொண்ட கேள்வி, "ஒவ்வொரு நாள் காலையிலும் தேவன் என்னை வந்து சந்திப்பதற்கு நான் ஆயத்தமாக இருக்கிறேனா? அந்த எதிர்பார்ப்போடு நான் படுக்கையிலிருந்து விழித்து எழுகிறேனா?

தொடர்ந்து என்னை நானே கேட்டுக் கொண்டது: ஏன் தேவன் நம்மைச் சோதிக்கிறார்?" அதற்கான காரணம் என்ன?

சோதனை என்ற சொல்லுக்கு காலின்ஸ் அகராதி இப்படியாக விளக்கமளிக்கிறது: *சில பரீட்சைகள் மூலம் ஒருவருடைய தகுதியை அறிந்து கொள்ளுதல்.* தேவன் நம்மேல் கோபமாக இருப்பதினால் நம்மை சோதிக்காமல் நாம் தாழ்மையுடையவர்களாய் இருக்கும்படி நம்மைப் பரீட்சிக்கின்றார். மாறாக

சோதனையானது தேவனுடைய சலுகையின் அறிகுறியாகும். நம்முடைய மதிப்பை நிலை நாட்டவே அவர் நம்மை சோதிக்கிறார்.

பொன் வேலை செய்யும் தட்டான் தங்கத்தையோ, வெள்ளியையோ சில சோதனைகளுக்கு உட்படுத்துகிறான். ஏனெனில் அவைகள் விலையேறப்பெற்றவை. இரும்பையோ, தகரத்தையோ அவன் சோதிப்பதில்லை.

உதாரணத்திற்கு யோபும் ஆபிரகாமும்

முற்காலத்தில் மிகவும் தெய்வபக்தியுள்ள நீதிமான் ஒருவர் இருந்தார். அவர் பெயர் யோபு. தேவன் யோபைக் குறித்து மிகவும் பெருமைப்பட்டார். சாத்தானிடத்தில் யோபைக்குறித்துப் பெருமிதத்துடன் இவ்வாறு கூறுகிறார்:

கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.
(யோபு 1:8)

யோபுவை சோதிக்கும்படியாக தேவன் சாத்தானுக்கு அனுமதியளித்தார். முதலாவது யோபுக்கு இருந்த எல்லா சொத்துக்களையும் அழித்துப்போட சாத்தானுக்கு தேவன் அனுமதி கொடுத்தார்: அவருடைய உடைமைகள், அவருடைய வேலைக்காரர், பிள்ளைகள் எல்லாரும் அழிந்துபோயினர். யோபுவின் சரீரத்தையும் சாத்தான் தொடும்படிக்கு தேவன் உத்தரவு கொடுத்தார். யோபுடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டார். ஆனால் யோபுடைய உயிரை மட்டும் எடுக்க தேவன் சாத்தானுக்கு அனுமதியளிக்கவில்லை.

தேவன் தன்னைச் சோதிப்பதை யோபு உணர்ந்திருந்தார். "...அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்." என்று கூறுகிறார் (யோபு 23:10). பொன்னானது அக்கினியில் சோதிக்கப்படுவதைப் போல, தான் சோதிக்கப்படுவதை அறிந்திருந்தார். இதுதான் அவருக்கு சோதனையைச் சகித்துக்கொள்ள பெலன் தந்தது. ஆத்துமாவின் துயரத்தினால் அவர் கதறினாலும் அவர் ஒரு போதும் தேவனை மறுதலிக்கவில்லை.

எலிப்பாசும் யோபுடைய மற்ற இரு நண்பர்களும், யோபுடைய உபத்திரவத்திற்கு அவருடைய பாவமே காரணம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். எனவே அவர் மீது எல்லாவகையான குற்றச்சாட்டுகளையும் கூறுகின்றனர். ஆனால் கடைசியில் தேவன் யோபு குற்றமற்றவர் என்று கூறுகிறார். யோபுடைய நண்பர்களையோ கடிந்து கொள்ளுகிறார். கர்த்தர் எலிப்பாசைப் பார்த்து "என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை என்று கூறுகிறார்." (யோபு 42:7).

மிகவும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்ட மற்றொரு நீதிமான் ஆபிரகாம் ஆவார். அவர் தனது ஒரே மகனையே தகனபலியாக ஒப்புக்கொடுக்கும்படிச் சோதிக்கப்பட்டார். ஆபிரகாமைக் குறித்து தேவன் சிறந்த ஒரு நோக்கம் வைத்திருந்ததால், அவர் விசேஷமான முறையில் சோதிக்கப்பட்டார்: தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட யூத மக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஆபிரகாம் தகப்பனாக மாற வேண்டியிருந்தது. யாரைக் குறித்தெல்லாம் தேவன் சிறப்பான நோக்கம் அல்லது திட்டம் வைத்திருக்கிறாரோ அவர்களுக்கெல்லாம் தேவன் விசேஷித்த சோதனைகளை அனுமதிக்கிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும்

சோதனைகளைச் சந்தித்தாக வேண்டும் என்று வேதம் (புதிய ஏற்பாடு) நம்மை எச்சரிக்கிறது. தங்கத்தின் தரத்தை அக்கினியில் சோதிப்பதைப் போல நமது விசுவாசமும் சோதிக்கப்படும் என்று நமது விசுவாசத்தை பேதுரு பொன்னுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார் (1 பேதுரு 1:7). சோதனையை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று யாக்கோபு கூறுகிறார்.

என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. (யாக்கோபு 1:2–4).

பல சமயங்களில் நானும் என் மனைவி ரூத்தும் சோதனைகளைச் சரியானமுறையில் ஏற்றுக் கொள்ளாததால் தேவனிடத்தில் மன்னிப்புக் கோர வேண்டியதாயிருந்தது. அவற்றையெல்லாம் நாங்கள் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளவில்லை!

சோதனைகளை எப்படி ஏற்றுக்கொள்வது என்பதைக் குறித்துக் யாக்கோபு கூறும்போது யோபுவை உதாரணமாகக் கூறுகிறார்:

இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே. (யாக்கோபு 5:11)

சோதனை அல்லது சிட்சை?

தேவனுடைய சோதனைக்கும் சிட்சைக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

அநேக மக்கள் தாங்கள் கிறிஸ்தவர்களாக மாறிய பின்பு, சிறப்பாக விசுவாசிகளாக இருக்கையில், தேவனுடைய சிட்சை தங்களுக்குக் கிடையாது என்று எண்ணுகின்றனர்.

> ***அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே.***
>
> ***கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.***
>
> ***நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?***
>
> ***எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே.***
>
> *(எபிரெயர் 12:5–8)*

மோசேயினிடத்தில் தேவன் நடப்பித்த காரியங்களை உதாரணமாகக் கொண்டு, அவர் சில காரியங்களை எனக்கு ஞாபகப்படுத்தினார். இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க மோசேயை தேவன் அழைத்தபோது அவருக்கு வயது 80. ஆனால் மோசே எகிப்துக்குத் திரும்பிச் செல்லும் வழியில் தேவன்

அவரைச் சந்தித்து அவரைக் கொல்லப் பார்க்கிறார். (யாத்திராகமம் 4:24–26)

ஏன்? மோசேயின் கீழ்ப்படியாமை தான் இதற்குக் காரணம். ஆபிரகாமோடும் அவர் சந்ததியோடும் தேவன் ஏற்படுத்தின விருத்தசேதனத்தின் உடன்படிக்கையை மோசே நிறைவேற்றவில்லை (ஆதியாகமம் 17:9–14). மோசே அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டு அவருடைய மகனுக்கு விருத்தசேதனம் செய்தபின்புதான், மோசேயின் உயிரை தேவன் தப்பவிட்டு அவரைப் போக அனுமதிக்கிறார். கீழ்ப்படியாமையோடு இந்தப் பணியை நிறைவேற்றுவதைவிட மோசே கொல்லப்படுவதே மேல், என தேவன் எண்ணினார். மோசே ஒரு தலைவன் என்ற நிலையைப் பெற்றதனால் தேவனுடைய காரியங்களில் கீழ்ப்படியாமலிருக்க அது ஒருபோதும் இடமளிக்கவில்லை. அவர் எல்லாவற்றிலும் சரியாக இருக்கவேண்டுமென்ற சூழ்நிலையைத் தான் இது ஏற்படுத்தியது.

நான் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தேவனோடு நடந்து சென்றாலும், தனிப்பட்ட முறையில் தேவனோடு இணைந்து செல்ல சில காரியங்களை நான் நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது. என்னுடைய வாழ்க்கையில் நான் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லையெனில் தேவன் எனக்குக் கொடுத்த பணியை என்னால் நிறைவேற்ற முடிந்திருக்காது.

தேவனோடு நாம் இணைந்து செயல்படும்போது தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி சங்கீதம் 139:23–24ல் உள்ள தாவீதின் ஜெபத்தை நாம் ஜெபிக்க வேண்டும்:

தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.

வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

நம் உள்ளத்தை தேவன் ஆராய்ந்து பார்க்குமாறு உண்மையிலேயே அனுமதிக்கும் பொழுது, அவர் எந்த ஒரு காரியத்தையும் தவறு என்று சுட்டிக்காட்டவில்லையெனில், நாம் தேவனால் சிட்சிக்கப்படவில்லை மாறாக சோதிக்கப்படுகிறோம் என்று நாம் அறிந்துகொள்ளலாம்.

ஆண்டவர் வெளிப்படுத்தும் காரியத்தைப் பொறுத்தே நாம் எவ்வாறு அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டுமென்பதைத் தீர்மானிக்க இயலும். சிட்சிக்கப்படும் வேளை நம்மில் மனந்திரும்புதலையும், சோதிக்கப்படும்போது சகிப்புத்தன்மையையும் நாம் வெளிப்படுத்தவேண்டும். நாம் மன்னிப்புப் பெற வேண்டிய காரியத்திற்குப் பதிலாக மௌனமாய் இருப்போமென்றால் மனக்கடினம் என்னும் பாவத்திற்கும், மற்றும் தேவனுடைய சிட்சைக்கான காரணத்தைத் தெரிந்துகொள்ளாமற்போகும் பாவத்துக்கும் உள்ளாவோம்.

தேவன் என்ன எதிர்பார்க்கிறார்?

ஆதாமும் ஏவாளும் சாத்தானால் சோதிக்கப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் பாவம் மற்றும் நீதியின் பலன்கள் குறித்து நாம் அறியலாம். சாத்தானுக்கு கிரேக்க மொழியில் 'டயபெலாஸ்' என்று கூறப்பட்டுள்ளது. அதற்கு 'ஒருவருடைய நடத்தையைக் குறித்து குற்றம் சுமத்திப் பேசுபவன்' என்று பொருள். இது சாத்தானுடைய முக்கியமான வேலையாகும்.

முதலாவது தேவனுடைய நடவடிக்கையையே அவதூறாகப் பேசுகிறான். எனவே ஏவாளைப் பார்த்து "... நீங்கள் தோட்டத்திலுள்ள சகல

விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்னும் முதல் கேள்வியைக் கேட்கிறான். (ஆதி. 3:1). தேவன் சகல அதிகாரமும் உடையவர், சர்வாதிகாரி, நியாயமாய் நடப்பவரல்ல, அன்புடையவரல்ல என்று அவர்கள் நினைக்குமளவுக்கு அவனுடைய பேச்சு இருந்தது. அவர்கள் நன்மை தீமை அறியும் கனியைப் புசிப்பதின் மூலம் "உயர்ந்த ஞானத்தின் நிலையை" பெற்றுக் கொள்வார்கள் என்பதால், ஆதாமையும் ஏவாளையும் தேவன் கட்டுப்படுத்தி வைத்திருந்தார் என்று அவர்கள் உணரும்படி பேசுகிறான்.

தேவன் அவர்களுக்கு நன்மையும் அழகும் சந்தோஷத்தையும் தரும் அனைத்துக் காரியங்களையும் ஏற்கெனவே கொடுத்திருந்தும், தேவனைக் குறித்த நல்ல எண்ணத்தைப் பற்றிய நம்பிக்கையைக் குலைக்க வேண்டுமென்பதுதான் சாத்தானுடைய நோக்கமாயிருந்தது.

தேவன் நன்மை செய்பவர் என்பதில் அவநம்பிக்கை கொண்ட ஆதாமும் ஏவாளும் அதன்பின் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்க ஆரம்பித்ததால் கீழ்ப்படியாமையின் செயலுக்குத் தள்ளப்பட்டனர். அவர்களுடைய வீழ்ச்சிக்கு மூன்று படிகள் இருந்தன: அவநம்பிக்கை, அவிசுவாசம், கீழ்ப்படியாமை.

வீழ்ச்சியின் படிகளிலிருந்து மீண்டு மேலே வர தேவன் ஒரு வழியை உண்டாக்கினார். அது கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசமே. அது அவிசுவாசத்திற்குப் பதிலாக விசுவாசத்தையும், கீழ்ப்படியாமைக்குப் பதிலாக கீழ்ப்படிதலையும், அவநம்பிக்கைக்குப் பதிலாக நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது. விசுவாசம் கீழ்ப்படிதலுக்கு நேராக நடத்துகிறது. இது முதல் படி. ஆனால் விசுவாசம் நம்பிக்கையை ஏற்படுத்தாதவரை இந்த ஏற்பாடு முழுமையடைவதில்லை.

தேவன் பேரில் நம்பிக்கை வைத்தல்

விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்குமுள்ள வித்தியாசம் என்ன? விசுவாசம் ஒரு **செயல்**, *நம்பிக்கை என்பது நமது* **மனோபாவம்**. *(ஸ்மித் விக்கிள்ஸ் வொர்த் என்பவர் விசுவாசம் என்பது ஒரு செயல் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கூறுவார்.)*

விசுவாசம் ஒரு செயல்; நம்பிக்கை என்பது மனோபாவம் என்பதைக் குறித்த உதாரணத்தை சங்கீதம் 37:5*ல் நாம் காணலாம்:*

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

ஒப்புவித்தல் என்பது விசுவாசத்தின் மூலம் செய்யப்படும் ஒரு செயலாகும். நம்பிக்கை என்பது முன்பு ஒப்புவித்த செய்கையின் தொடர்ச்சியாக வரும் மனோபாவமாகும். இதன் பிறகு தேவன் பொறுப்பேற்றுக் கொள்வார். அவர் காரியத்தை நிறைவேற்றுவார்.

இதற்கு ஒரு சிறிய உதாரணமாக நாம் வங்கியில் பணத்தைப் போடுவதைக் கூறலாம். வங்கியிலுள்ள அதிகாரியிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு அதற்கான ரசீதைப் பெற்றுக் கொள்ளுகிறோம், இது தான் ஒப்புவித்தல்.

இதன் பிறகு நாம் இரவு தூக்கத்திலிருந்து விழித்து, இந்த வங்கியினர் எனது பணத்தை பத்திரமாக பாதுகாப்பார்களா? எனக்குக் கிடைக்க வேண்டிய வட்டித் தொகை ஒழுங்காகக் கிடைக்குமா? என்று நாம் பயப்படுவதில்லை. அந்த ரசீதை பத்திரமாக ஓர் இடத்தில் வைத்துவிட்டு நாம் நன்றாகத் தூங்குகிறோம். இதுதான் நம்பிக்கை.

அநேக கிறிஸ்தவர்கள் முதல் படியாகிய விசுவாச அடியை எடுத்து வைக்கின்றனர், ஆனால் அதனைத் தொடர்ந்து வரவேண்டிய நம்பிக்கையின் மனோபாவத்தை அவர்கள் கடைபிடிப்பதில்லை. நம்மில் எத்தனைபேர் உலகப்பிரகாரமான வங்கியை நம்புகிறோம், ஆனால் பரலோகத்தின் தேவனை அந்த அளவிற்கு நம்புவதில்லையே ஏன்?

தேவன் நம்மைச் சோதிப்பதன் பிரதானமான நோக்கம்: நம்பிக்கையை நம்மில் தோற்றுவிப்பதாகும். யோபுவின் வாழ்க்கையில் இது உண்மையாகும். அவ்வளவு சோதனைகளின் மத்தியிலும்: "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; . . ." என்று கூறுகிறார். (யோபு 13:15)

மேலும் நம்பிக்கையானது அவரது கண்களை தூரத்தில் ஏறெடுத்துப்பார்த்து நித்தியத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றிக் காண உதவியது:

> ***என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.***
>
> ***இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.***
>
> ***அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது.*** ***(யோபு** 19:25–27)*

நம்பிக்கை ஏன் முக்கியத்துவம் பெறுகிறது? ஏனெனில் தேவனுடைய தன்மையைக் குறித்த நமது மதிப்பீட்டை அது வெளிப்படுத்துகிறது. ஆதாமும்

ஏவாளும் சாத்தானுடைய சோதனையில் வீழ்ந்தபோது வார்த்தைகளால் விவரிப்பதற்கும் மேலாக அவர்களது செயல்கள் பேசின. அவர்கள் இவ்வாறு கூறினர்: "தேவன் நீதியானவரல்ல, அன்புள்ளவரல்ல, எங்களோடு நியாயமாய் அவர் நடக்கவில்லை. அவர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரல்ல."

வீழ்ச்சியின் விளைவுகளை மேற்கொண்டு நம்பிக்கையை நம்மில் தோற்றுவித்தாலொழிய பாவத்திலிருந்து நாம் பெற்ற மீட்பு பூரணமாகாது. இதற்காக நாம் பல சோதனைகளைக் கடந்து வரவேண்டும். **தேவனுடைய இந்த நோக்கத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது இது மிகவும் முக்கியம்: அவருடைய நம்பத்தகு தன்மையைக் குறித்து நமக்கு எப்போதும் ஓர் அசைக்க முடியாத உறுதிப்பாடு நம்மில் உருவாக வேண்டும்.**

கிறிஸ்துவைப் போல

நம்பிக்கை குறித்த மேன்மையான உதாரணத்தை இயேசு தாமே நமக்குக் காட்டியுள்ளார். அவருடைய பிதாவின் திட்டம் நிறைவேற கொடூரமான, தீய, தேவனற்ற மனிதர்களிடம் அவர் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டியிருந்தது. அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, துப்பி, வாரினால் அடித்து, அவரது உடையைக் கழற்றி சிலுவையில் ஆணியடித்தனர். "இயேசு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கதறுகிறார். (மத்தேயு 27:46)

இவ்வளவுக்குப் பிறகும் கூட தனது பிதாவின் மேல் உள்ள நம்பிக்கையை இயேசு இழக்கவில்லை. கடைசியில் தமது ஆவியைப் பிதாவின் கைகளில் ஒப்புவித்தார்.

தேவனை நோக்கிக் கூப்பிட்டு அவர் பதிலளிக்காதபோது நாம் என்ன செய்கிறோம்?

இன்னும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்போமா?

நமது வெற்றிகளைவிட, தேவன் நமது குணாதிசயத்தின் மேல் மிகுந்த அக்கறை உள்ளவராக இருக்கிறார். நாம் பெறும் வெற்றி ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே உரியது. ஆனால் நமது குணாதிசயம் எப்போதும் நிலைத்திருக்கக் கூடியது. நித்தியத்தை நாம் எவ்வாறு கழிக்கப்போகிறோம் என்பதை அது தீர்மானிக்கக் கூடியது.

நமது சகிப்புத் தன்மைக்குமேல் சோதிக்கப்பட தேவன் நம்மை அனுமதிக்கமாட்டார். இயேசுவிடம் எதிர்பார்த்த காரியங்களை தேவன் நம்மிடம் எதிர்பார்க்க மாட்டார். யோபுவிடம் எதிர்பார்த்த அளவு கூட நம்மிடம் தேவன் எதிர்பார்க்க மாட்டார். தேவன் நம்மை எந்த நோக்கத்திற்காகப் படைத்தாரோ அந்த நோக்கத்தை கிறிஸ்துவில் நாம் நிறைவேற்றும்வரை, நமது குணாதிசயம் மாற்றமடையத்தக்கதாக, நாம் சந்திக்கும் ஒவ்வொரு சோதனையும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

> [12]***சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். (யாக்கோபு 1:12)***

சோதனைகளை எதிர்கொள்ளுதல்

கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் சோதனைகளைச் சந்திக்க வேண்டும். சோதனைகள் பல விதங்களில் நேரிடும்: நமது தேக ஆரோக்கியம் அல்லது நிதி நிலைமையில் குறைபாடு, தனிப்பட்ட முறையில் சில உறவுகளில் விரிசல், ஒதுக்கப்பட்ட நிலை, நமது விசுவாசத்தினிமித்தம் உபத்திரவம், மறுபக்கம் ஒளியற்ற இருண்ட குகையிலிருப்பது போன்ற சூழல் ஏற்படுகிறது.

சோதனை ஏற்படும் சமயங்களில் நாம் மனதில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான காரியம் என்னவென்றால், நாம் பெறும் வெற்றிகளைவிட நமது நடத்தை குறித்து தேவன் அதிகக் கரிசனை உள்ளவராயிருக்கிறார்.

அப்படியென்றால் சோதனைகளை நாம் எப்படி சமாளிப்பது? நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல சோதனைக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்திருக்க வேண்டும். அநேக முறை தேவனுடைய கடிந்து கொள்ளுதலை நாம் அறிந்துகொள்ளுவதில்லை. இதனால் தேவனுக்கு நம்மை அர்ப்பணிப்பதற்குப் பதிலாக சாத்தானை நாம்

எதிர்த்து நிற்கிறோம். இதன் மூலம் வெளிப்படும் நடத்தை குறித்த பிரச்சனை என்னவெனில் பெருமையாகும்.

19ம் சங்கீதத்திலுள்ள கீழ்க்கண்ட ஜெபத்தை ரூத்தும் நானும் அடிக்கடி ஜெபிப்பதுண்டு:

தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.

துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும்; அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். (சங்கீதம் 19:12,13)

மறைவான பாவங்கள் என்பவை நாம் மற்றவர்களிடமிருந்து மறைத்து செய்யும் பாவங்களல்ல; தேவனிடமிருந்து மறைத்து செய்யும் பாவங்களாகும். அவைகள் நமக்கு இரகசிய பாவங்கள். இவை நமது ஆள்தத்துவத்தைக் கெடுப்பவை. இதை நாம் உணருவதில்லை. தாவீது இவற்றைத் துணிகரமான பாவங்கள் என்று கூறுகிறார்; இத்தகைய பாவங்களைச் செய்யும்போது தேவனுக்கு முன்பாக நமது நடத்தை சரியானதுதான் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அது அவருக்கு முன்பாகத் தவறானதாகும்.

அநேக முறை தேவன் இத்தகைய பாவங்களை நமக்கு வெளிப்படுத்துவதில்லை. நாம் நம்மைத் தாழ்த்தி நமது நடத்தையை ஆராய்ந்து பார்க்குமாறு ஜெபித்து, நமது நோக்கங்களை அவருக்கு முன்பாக வெளிப்படுத்தும் வரை, அவர் இவற்றை நமக்கு வெளிப்படுத்துவதில்லை. அதன் பிறகுதான் தேவன் சிட்சையை அனுமதிக்கிறார்.

தேவனுடைய சிட்சையை நமது வாழ்வில் அனுமதிக்கும்போது நாம் நான்கு காரியங்களைச் செய்ய வேண்டும்.

1. மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் கிறிஸ்தவ கொள்கைகளில் அடிப்படையானது. இதனை அநேக பிரசங்கிமார்கள் எடுத்துக் கூறுவதில்லை. "விசுவாசமுள்ளவனாயிரு" என்று கூறுவது செவிக்கு இனிதாயிருக்கலாம், ஆனால் வேதம் கூறுவது இது மட்டுமன்று. புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கூறப்பட்டுள்ள செய்தி: முதலில் மனந்திரும்புங்கள் (பாவ அறிக்கை) பிறகு விசுவாசியுங்கள். நமது வாழ்வில் பாவம் இருக்குமென்றால் பாவ அறிக்கை இல்லாமல் உண்டாகும் விசுவாசம் மனுஷீகமானது. உண்மையான விசுவாசத்தின் மூலம் கிடைக்கும் பலன் இதில் கிடைக்காது.

மனந்திரும்புதலுக்கான சரியான உதாரணம்: ஒரு வாகனத்தில் "U" வடிவில் திரும்பிச் செல்வதற்கு ஒப்பிடலாம். நீங்கள் சரியானபடி ஒரு வாழ்க்கை வாழவில்லை என்று உணருவீர்களென்றால், நீங்கள் நின்று "U" வடிவத்தில் திரும்பிச் செல்லுங்கள். நீங்கள் சென்ற பாதைக்கு எதிர்புறத்தில் செல்லுங்கள். அவ்வாறு நின்று எதிர்புறத்தில் செல்லவில்லை என்றால் நீங்கள் மனந்திரும்பவில்லை என்று பொருள்.

2. ஒப்புக்கொடுத்தல்:

ரோமர் 10:9ன் படி இரட்சிப்புப்பெற இரண்டு நிபந்தனைகள் உள்ளன: தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உங்கள் இருதயத்திலே விசுவாசிக்க வேண்டும். இயேசுவை தேவன் என்று உங்கள் வாயினால் அறிக்கை செய்ய வேண்டும்.

இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்யும்போது உங்கள் முழு வாழ்க்கையையும் அவருடைய கட்டுப்பாட்டில் ஒப்படைக்கிறீர்கள். உங்கள் நேரம், பணம், தாலந்துகள், முக்கியத்துவம் பெறும் அனைத்துக் காரியங்கள், உங்கள் உறவுகள் அனைத்தையும், அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறார். நீங்கள் எதையும் எடுத்துக்கொள்ள முடியாது. ஒருவர் இவ்வாறு கூறினார்: இயேசு எல்லாவற்றிற்கும் கர்த்தராக இல்லை என்றால் அவர் ஒருபோதும் கர்த்தரல்ல.

3. வேதவாக்கியங்கள் குறித்த நமது செயல்பாடு

“தேவன் சொன்னதுண்டோ” (ஆதியாகமம் 3:1) என்று சாத்தான் நமது ஆதி பெற்றோரைப் பார்த்து கேட்டதன் மூலம் தேவனுடைய வார்த்தையைச் சந்தேகிக்கும் வண்ணம் அவர்களைத் தூண்டி அவர்கள் பாவத்தில் விழ அவன் காரணமாயிருந்தான்.

“வேத வாக்கியங்கள் தவறாதிருக்கிறது” என்று இயேசு தாமே கூறுவதன் மூலம் வேத வாக்கியங்கள் குறித்த தமது தெய்வீக முத்திரையை அவர் பதிப்பதை நாம் காணலாம். (யோவான் 10:35)

“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; . . .” என்று பவுலும் கூறுகிறார். (2 தீமோத்தேயு 3:16)

வேத வாக்கியங்கள் குறித்து நாம் கேள்வி கேட்பது தவறான காரியம். ஏதேன் தோட்டத்தில் நடந்ததுபோல் அழிவின் பாதையில் அது நம்மைக் கொண்டு செல்லும்.

4. சரியான உறவுகள்

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படை, சரியான கோட்பாடுகளை நம்புவதாகும். சரியான

கொள்கைகளை சரியான முறையில் பயன்படுத்தும்போது சரியான உறவுகள் ஏற்படும். நமது தனிப்பட்ட உறவுகள் நாம் கடைபிடிக்கும் கொள்கைகளை வெளிப்படுத்தவேண்டும்.

சரியான உறவுகளை நாம் வைத்திருக்க வேண்டும் என்பதை இயேசு தாமே மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார். சகோதரன் நமக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது அவனுக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று தெளிவான போதனையைக் கூறுகிறார் (மத்தேயு 18:15–17). ". . . நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து" என்று இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் கூறுகிறார். (மத்தேயு 5:25)

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" என்று தமது மாதிரி ஜெபத்தைக் கற்றுக் கொடுக்கும் போது இயேசு எச்சரிக்கிறார். (மத்தேயு 6:15)

நாம் சோதனைக்குட்படும்போது நமது மனோபாவம் மற்றும் நமது உறவுகளைச் சரிபார்த்து அதில் கசப்பான காரியம், மன்னியாத தன்மை, எரிச்சலான காரியம் ஏதும் இல்லை என்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தவறான மக்களோடு நாம் சரியான உறவை வைத்துக் கொள்ள முடியாது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். ". . . ஆகாத உரையாடல்கள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று பவுல் நம்மை எச்சரிக்கிறார் (1 கொரிந்தியர் 15:33). தெரிந்தும் பரிசுத்தமில்லாதவர்களோடு உறவு வைத்துக் கொள்வோமென்றால் நாம் பரிசுத்தமாக வாழமுடியாது. தேவனுடைய வார்த்தையாகிய

கூர்மையான பட்டயத்தினால் இத்தகைய உறவுகளை வெட்டிவிடவேண்டும்.

இயேசுவின் முன்மாதிரி

சோதனைகளைச் சந்திப்பது எப்படி என்பதற்கு இயேசு தாமே முன்னுதாரணமாக உள்ளார். எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறார் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (எபிரெயர் 4:15).

> ***ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவங்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;***
> *(எபிரெயர் 12:1–2)*

இவ்வாறு எபிரெயர் நிருபத்தில் இயேசுவை முன்னுதாரணமாகக் கூறப்பட்டுள்ளதை நாம் பின்பற்றவேண்டும். நமது வாழ்வில் பாவகாரியங்களை ஒழிப்பது மட்டும் போதாது. ஆனால் தன்னிலே ஒரு காரியம் பாவமற்றதாக இருக்கலாம்; எனினும் அவை நமக்கு உளைச்சலைத் தந்து, கிறிஸ்துவிற்கு நாம் ஊழியம் செய்வதற்குத் தடையாயிருக்குமாயின் அவற்றையும் நீக்கிட வேண்டும்.

ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவன் தன் உடலில் பாரமான உடைகளைக் களைந்து மிக மிகக் குறைந்த உடையில் இருப்பான். தேவையற்ற சுமைகளை அவன் சுமப்பதில்லை. நாமும் அதே போல் செய்ய வேண்டும்.

நாம் கைவிடவேண்டிய சில காரியங்கள் இவைகள்: ஆவிக்குரிய முக்கியத்துவமற்ற சமுதாய எதிர்ப்புகள்,

சில மக்கள், இடங்கள், செல்லப் பிராணிகள் (pets) போன்றவையின் மேல் அளவுகடந்த கரிசனை, பங்குச்சந்தை, விளையாட்டுகள், பணக்கவலை, உடல்நலம், அரசியல், குடும்பம், அழகு சாதனங்கள் இவைகளின் மேல் அளவிற்கு மிஞ்சி வைக்கும் ஆர்வம் இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

நமது நேரத்தையும், கவனத்தையும், அதிகமாக நாம் செலவழிக்கும் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் நாம் கேட்க வேண்டிய ஒரு கேள்வி: இது இயேசுவை மகிமைப்படுத்துமா? இது ஆவிக்குரிய பிரகாரமாக என்னைத் தட்டி எழுப்புமா?

பொறுமையின் தேவை

வேதத்தில் முழுவதுமாக நாம் காணும் ஒரு முக்கியமான குணாதிசயம் பொறுமையாகும். அநேக கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான காரியமாகத் தோன்றுவதில்லை. என்னுடைய பிரசங்கத்தின் தலைப்பு "பொறுமை" என்று நான் கூறுவேனென்றால், சபை மக்களில் ஒரு சிலரே "அல்லேலூயா" சொல்லுவார்கள். "பொறுமையை வளர்த்துக்கொள்வது எப்படி?" என்று சில சமயங்களில் நான் கூறுவதுண்டு. மக்கள் ஆர்வத்துடன் அந்த இரகசியத்தைக் குறித்துக் கவனமாகக் கேட்டார்கள். "பொறுமையை நம்மில் வளர்த்துக்கொள்ள ஒரே வழி பொறுமையாக இருப்பதுதான்" என்று நான் கூறுவேன். மக்கள் இதைக்கேட்டு பெருமூச்சு விடுவார்கள். அந்த பெருமூச்சின் அர்த்தம் "இதைவிட சுலபமான வழி வேறு இல்லையா?" என்பதாகும்.

இல்லை; இதைவிடச் சுலபமான வழி ஏதும் இல்லை! வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பொறுமை மிகவும் அவசியம். பொறுமை இதைப் பெற்றுத் தருகிறது. இதை நாம் ஏற்றுக்கொள்வோமென்றால்

நம்மை நோக்கி வரும் ஒவ்வொரு சோதனையையும் சரியான முறையில் நாம் சந்திக்கப் பழகிக் கொள்ளுவோம். “உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.” (யாக்கோபு 1:2–3)

“பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது” என்று யாக்கோபு கூறுகிறார். (யாக்கோபு 1:4) வேறு வகையாகக் கூறினால், தேவனுடைய சித்தம் முழுமையாக நிறைவேறும் வரையிலும் - அவர் அந்த சோதனையை முடிவுக்குக் கொண்டுவரும் வரையிலும் நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.

“இந்த சோதனை ஆறு மாதத்திற்கு மட்டுமே இருக்கும்” என்று தேவன் கூறுவது அரிது. ஐந்தரை மாதத்திற்குப் பின்பு சோதனையில் பாதிக்கப்பட்ட மனிதன் “இதற்கு மேல் என்னால் தாங்க முடியாது, சோதனை இத்துடன் முடியட்டும், என்னால் இதற்கு மேல் தாங்க முடியாது” என்று கூறலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் நமக்குக் கொடுத்துள்ள வாக்குத்தத்தத்தை நாம் நினைவு கூற வேண்டும்:

> ***மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.*** *(1 கொரிந்தியர் 10:13)*

சுய கட்டுப்பாட்டில் வளருதல்

எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் ஆக்கியோன் பந்தயத்தில் ஓடுகிற ஓட்டப்பந்தய வீரனைக்குறித்த உதாரணத்தைக் கூறுவது போல, பவுலும் 1 கொரிந்தியர் 9:25ல் கூறுகிறார்: “பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள்...” . இச்சையடக்கத்தை நம் வாழ்க்கையில் பழக்கப்படுத்திக் கொண்டால்தான் பொறுமையாயிருப்பதின் பெலன் நமக்குக் கிடைக்கும்.

விசுவாசம் என்னும் அடித்தளத்திலிருந்து கிறிஸ்தவத்தின் உன்னத நடத்தையாகிய அன்பில் வளர்ந்து செல்ல 7 வகையான “படிகள்” உள்ளதாக பேதுரு, 2 பேதுரு 1:5–7ல் கூறுகிறார்:

தைரியம்;
ஞானம்;
இச்சையடக்கம்;
பொறுமை;
தேவபக்தி;
சகோதர சிநேகம்;
அன்பு.

பொறுமையைப் பெற்றுக் கொள்ள இச்சையடக்கம் மிகவும் அத்தியாவசியமான ஒன்று என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். பொறுமைக்கு வரும் ஒவ்வொரு சோதனையும், இச்சையடக்கத்திற்கும் வரும் சோதனையாகவே கருதப்படும். நமது ஆள்த்தத்துவத்தில் எந்தப் பகுதியில் எந்தவிதமான பெலவீனம் இருந்தாலும் இது அதனை வெளிப்படுத்தும்.

உணர்ச்சிவசப்படும் காரியங்களில் வெளிப்படும் பெலவீனம், பயமாகவோ, ஊக்கமின்மையாகவோ அல்லது மனத்தாழ்ச்சியாகவோ இருக்கலாம். நமது

மாம்சத்தின் தன்மையின் மூலம் வெளிப்படும் பெலவீனம், கட்டுப்படுத்தப்படாத இச்சைகளும், பசிகளுமாகும். நமது தனிப்பட்ட உறவுகளில் வெளிப்படும் காரியங்கள், கோபம் மற்றும் பொறாமையாகும். ஆவிக்குரிய காரியத்தில் பெருமையும், சுய நம்பிக்கையும் ஆகும்.

எவ்வகையான பெலவீனமாக இருந்தாலும் பொறுமைக்கு ஏற்படும் சோதனையின் மூலம் அது வெளிப்படும். அநேக கிறிஸ்தவர்கள் இச்சையடக்கத்தையும், பொறுமையையும் தாண்டி மேலே செல்ல முடிவதில்லை என்பது மிகவும் வேதனையான காரியம். இதனால் கிறிஸ்தவ வாழ்வின் மிக உயர்ந்த நிலையாகிய கீழ்க்கண்ட அடுத்த மூன்று படிகளைத் தாண்டி அவர்களால் செல்ல முடிவதில்லை: தேவ பக்தி, சகோதர சினேகம், அன்பு.

சோதனைகளிலேயே மிகவும் கடினமானது

கிறிஸ்தவர்கள் சந்திக்கும் சோதனைகளிலேயே மிகவும் கடினமானது எது? என்ற கேள்வியை உங்கள் ஒவ்வொருவரையும் பார்த்து நான் கேட்டால் அதற்கு உங்களிடமிருந்து பலவிதமான பதில்கள் எனக்குக் கிடைக்கும். என்னுடைய பதில் உங்கள் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும். ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் கிறிஸ்தவ ஊழியத்தில் இருப்பதால் எனது பதில் அதனடிப்படையிலானதாக இருக்கிறது. நாம் சந்திக்கும் மிகவும் கடினமானதும் மிகவும் அபூர்வமானதுமான சோதனை "வெற்றியாகும்"

"ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவு நல்லது. பெருமையுள்ளவனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்" (பிரசங்கி 7:8) என்று சாலொமோன் ராஜா கூறுகிறார். வேறு வகையாய் கூறினால், நீங்கள் வெற்றிபெற்றவர் என்பது நீங்கள் எப்படி பந்தயத்தை ஆரம்பிக்கிறீர்கள் என்பதைப் பொருத்தல்ல, நீங்கள் எப்படிப் பந்தயத்தை முடிக்கிறீர்கள் என்பதைப் பொருத்தே அமைந்துள்ளது.

இருபது ஆண்டுகள் விசுவாசத்தினிமித்தம் சிறைத்

தண்டனையை அனுபவித்தவரும் சமீபத்தில் கர்த்தருடைய இராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவருமான சீனா தேசத்தைச் சேர்ந்த ஒரு போதகர் இவ்வாறு கூறினார்: "அநேக மக்களின் ஆரம்பம் நன்றாக உள்ளது. ஆனால் சிலருடைய முடிவு மட்டுமே நன்றாக இருக்கிறது". இதையேதான் நானும் கூறுகிறேன்.

இஸ்ரவேல் இராஜ்ஜியத்தில் வெற்றியுள்ள அரசாட்சியைத் தந்த சில இராஜாக்களைப் பற்றி நாம் காணலாம்.

முதல் மூன்று இராஜாக்கள்

முதல் இராஜா **சவுல்**. இவர் மிகவும் பலசாலி; தலை சிறந்த வாலிபர். அவருடைய அரசாட்சியின் ஆரம்பத்தில் அநேக போர்களில் வெற்றி பெற்றார். அமலேக்கியருக்கு எதிராகப் போர்புரியும்படி ஆண்டவர் அவருக்குக் கட்டளை கொடுத்தபோது மக்களுக்குப் பயந்து ஆண்டவருக்கு அவர் முழுமையாகக் கீழ்ப்படியவில்லை. இதன் பயனாக, அவர் இஸ்ரவேல் தேசத்தின் அரச பதவியிலிருந்து தள்ளப்பட்டதான தேவனுடைய செய்தியை, சாமுவேல் தீர்க்கதரிசி சவுலினிடத்தில் கொண்டு வருகிறார்.

சவுலுடைய பிரச்சினை என்னவென்று சாமுவேலுடைய செய்தியின் மூலம் அறியலாம்: "நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்த போது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்?" சவுல் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்த வரைக்கும் தேவன் அவரை ஆசீர்வதித்தார். ஆனால் சவுலுக்குப் பெருமை வந்தபோது தேவன் அவரை ஒதுக்கித் தள்ளினார்.

இது நம் எல்லாருக்கும் பொருந்தும். நமது கண்களுக்கு நாம் சிறியவர்களாக இருக்கும் போது

பெரிய ஆண்டவருக்கு நாம் இடமளிக்கிறோம். ஆனால் நமது பார்வைக்கு நாம் பெரியவர்களாகத் தோன்றும் போது, தேவனுடைய மகத்துவத்தை நம் மூலம் வெளிப்படுத்த நாம் இடமளிப்பதில்லை.

சவுலுடைய பெருமை அவரை அழிவுக்கு நேராக வழிநடத்திச் சென்றது. அவருடைய வாழ்வின் முந்தைய இரவிலே அவர் ஒரு பில்லிசூனியப் பெண்ணிடத்தில் ஆலோசனை கேட்கிறார். அடுத்தநாள் போர்க்களத்தில் அவர் தற்கொலை செய்து கொள்ளுகிறார்.

அடுத்த இராஜா **தாவீது**. இவர் தேவனுடைய இதயத்துக்கேற்ற ஒரு மனிதனாக இருந்தார். இவர் பல வருடங்களாகக் குற்றவாளிபோல் சவுலினால் உபத்திரவத்தை அனுபவித்தார்; சவுலினால் தேடப்பட்டார். இருப்பினும் இவற்றையெல்லாம் வெற்றிகரமாகக் கடந்து வந்தார். அவருடைய அருமையான சாட்சி பின்வருமாறு:

கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார். என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன். நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை.

ஆனால் பின்னாளில் தாவீது தனது நடத்தையில் மாற்றம் ஏற்பட்டதால் கீழ்க்கண்டவாறு ஜெபிக்கிறார்:

தேவனே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

என்ன நேர்ந்தது? ஏன் இந்த மாற்றம்? தாவீது முழு வெற்றியைப் பெற்றார். அனைத்து இஸ்ரவேல் மேலும் இராஜாவானார். தனது எல்லா எதிரிகளையும் மேற்கொண்டார். அவர் தனது வெற்றியை முழுமையாக அனுபவித்தார். அதன் பின்பு போருக்குச் செல்லாமல் எருசலேமில் தன் வீட்டிலிருந்தார். அவருடைய மேன்மையைக் கெடுக்கும் செயலில் ஈடுபட தூண்டப்பட்டார்.

எனவே தனது பக்கத்து வீட்டுக்காரனாகிய உரியாவின் மனைவியாகிய பத்சேபாளைக் கற்பழிக்க அவர் தயங்கவில்லை. அதேபோல தனது பாவத்தை மறைக்க உரியாவைக் கொல்லவும் தயங்கவில்லை. இராஜாவாகிறதற்கு முன்னே அவர் கடைப்பிடித்து வந்த நெறிமுறைகளை அவர் வெற்றிகளைப் பெற்றபோது மறந்துவிட்டார்.

> ***கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! தாவீது தனது பாவத்தை அறிக்கை செய்தார்; தேவன் அவர் பாவத்தை மன்னித்தார். இருப்பினும் தாவீதின் பாவம் அவருடைய சந்ததிகள் மேல் ஒரு பெரிய பழியைக் கொண்டுவந்தது. தேவன் தாவீதை இவ்வாறு எச்சரிக்கின்றார்: "பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்."*** *(2 சாமு. 12:10)*

தேவனுடைய மன்னிப்பு, நமது பாவத்தின் அனைத்து விளைவுகளையும் நிராகரித்துவிடும் என்ற கட்டாயம் இல்லை என்பதை நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

தாவீதின் மகனாகிய ***சாலொமோன்*** *அவருக்குப்பின்பு இராஜாவானார். அவர் தேவனுக்குப் பிரியமானவராகவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவராகவும் இருந்தார். அவர் தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தி தனக்கு*

வேண்டிய ஞானத்தைக் கேட்டபடியால் தேவன் அவருக்கு சம்பத்தையும் மகிமையையும் கொடுத்தார். அவர் இஸ்ரவேல் இராஜாக்களிலேயே மிகுந்த ஞானவானாகவும் சம்பத்துள்ளவராகவும் புகழ்மிக்கவராகவும் விளங்கினார். மிகுந்த ஞானமுள்ளவராக இருந்தபோதும் வெற்றிக்கான சோதனையில் அவர் தேர்ச்சியடையவில்லை.

> ***சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.***
>
> ***சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான்.***
>
> ***சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.***
> *(1 இராஜா. 11:4–6)*

சாலொமோன் மகிமையான ஆரம்பத்தைக் கொண்டிருந்தாலும், ஒரு விக்கிரக ஆராதனைக்காரராக மரித்துப்போனார்.

மற்ற இரு இராஜாக்கள்

சாலொமோனுக்குப்பிறகு அரசு பிளவுபட்டது. வடக்கு இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் அரசின் அனைத்து அரசர்களும் ஒட்டுமொத்தமாக விக்கிரகாராதனைக்காரராக இருந்தபடியால் அவர்களை தேவன் புறக்கணித்தார். தெற்கு இராஜ்ஜியமாகிய

யூத இராஜ்ஜியத்தின் இராஜாக்களில் அநேகரும் கூட விக்கிரகாராதனைக்காரர்களாயினர். இருப்பினும் யூத இராஜாக்களில் சிலர் நீதியுள்ளவர்களாயிருந்தனர். எனினும் ஒருவர் கூட வெற்றியின் சோதனையை வெற்றிகரமாகக் கடந்து செல்லமுடியவில்லை.

உதாரணமாக **எசேக்கியா,** சில சீர்திருத்தங்களைச் செய்து மீண்டும் யெகோவாவைத் தொழுது கொள்ள ஏற்பாடுகளைச் செய்தார். அசீரிய தேசத்து அரசனாகிய சனகெரிப் எருசலேமை முற்றிகையிட்டபோது தேவன் எசேக்கியாவுக்கும் அவன் மக்களுக்கும் அற்புதவிதமாக விடுதலையளித்தார்.

பிறகு எசேக்கியா வியாதிப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தபோது அவனுடைய வியாதியிலிருந்து அவனை விடுவித்தது மட்டுமல்லாது சூரியனைப் பின்னிட்டுப் போகும்படி செய்து, தேவன் அவனுக்கு ஓர் அற்புதமான அடையாளத்தையும் கொடுத்தார். எசேக்கியாவுக்கு தேவன் அவனது ஆயுசு நாட்களோடே கூட பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக்கொடுத்தார்.

சூரியன் பின்னிட்டுப்போன அடையாளத்தின் மூலம் எசேக்கியாவின் புகழ் மற்ற நாடுகளிலும் பரவின. இதன் பலனாக பாபிலோனிலிருந்து தூதுவர்கள் வந்தார்கள். அவர்களுடைய பேச்சினால் கவரப்பட்டு தனது இராஜ்ஜியத்திலுள்ள எல்லாவற்றையும் அவர்களுக்குக் காட்டினான். ஆனால் தேவனுக்கு மகிமையைச் செலுத்தவில்லை!

எசேக்கியாவைப் பற்றிய முக்கியமான இரண்டு குறிப்புகளை வேதம் கூறுகிறது:

எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல்

மனமேட்டிமையானான். . . (2 நாளாகமம் 32:25)

ஆகிலும் பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க அவனிடத்துக்கு அனுப்பப்பட்ட விஷயத்தில் அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார். (2 நாளாகமம் 32:31)

எசேக்கியாவின் மூலம் நாம் இரண்டு காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம். தேவன் உங்களுக்கு ஏதாவது அற்புதம் செய்வார் என்றால் அதன் மூலம் நீங்கள் சிறந்த மனிதராக முடியாது; நீங்கள் ஒரு சிறப்பான தேவனை உடையவர்கள் என்றுதான் அதன் பொருள். தேவன் தம்முடைய பிரசன்னத்தை உங்களைவிட்டு எடுத்து, உங்கள் வாழ்க்கையில் அவர் வல்லமையாகக் கிரியை செய்யவில்லை என்றால், நீங்கள் தனிமையில் விடப்படும்போது எப்படி நடந்துகொள்வீர்கள் என்று சோதிப்பதற்காகத்தான் தேவன் இதை அனுமதித்தார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

யூத இராஜாக்களில் அதன்பிறகு வந்த ஒரு நீதியான இராஜா **யோசியா** ஆவார். யோசியாவும் எசேக்கியாவைப்போல மாற்றங்களைச் செய்து உண்மையான யெகோவா வழிபாட்டைக் கொண்டு வந்தார். வடக்கு இராஜ்ஜியத்தில் பெத்தேலில் இருந்த விக்கிரகாராதனையின் பலிபீடத்தை அவர் இடித்துப்போட்டார்.

யோசியாவின் வெற்றி அவருக்கு தன்னம்பிக்கையைக் கொடுத்து, யோசிக்காமல் வேகமாகக் காரியங்களைச் செய்ய வைத்தது. தேவனுடைய ஆலோசனையைக் கேட்காமல் எச்சரிப்புக்குச் செவிகொடாமல் எகிப்தின்

இராஜாவாகிய நேகோவை எதிர்த்துப் போர்புரிந்தார். ஆனால் போரில் மடிந்துபோனார். இவரோடு யூதா வம்சத்தின் நம்பிக்கையும் அழிந்து போனது.

புதிய ஏற்பாட்டில் நாம் காணும் வெற்றி பெற்ற மனிதர்கள்

புதிய ஏற்பாட்டில் இது குறித்து என்ன கூறப்பட்டுள்ளது? இது வித்தியாசமான நிலைகளைக் கொண்டுள்ளதா? சிறந்த முன்னுதாரணமான மக்களைப் பற்றி நாம் காணலாம். இயேசுவும் முக்கியமான மூவரான பேதுரு, யோவான், பவுல். இவர்களுடைய முடிவு எப்படிப்பட்டது?

இயேசு *உண்மையில் தன்னிகரற்ற, தலைசிறந்த, பாவமற்ற, தேவகுமாரன். ஒருபோதும் அவர் தோல்வியைச் சந்தித்தது இல்லை. இருப்பினும் அவர் ஆடையற்றவராய், பாவிகள் அவரைப் பரியாசம்பண்ண சிலுவையில் தொங்கி மரித்தார். இயேசுவை உலகம் அவ்வாறுதான் கடைசியாகக் கண்டது. அதன்பின்பு அவரது உயிர்த்தெழுதலும், அவரைச் சூழ்ந்திருந்த மகிமையும் "அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டது". (அப்போஸ்தலர்* 10:41) *உலகமக்களைப் பொருத்தவரை தேவன் இவற்றை நேரடியாக வெளிப்படுத்தவில்லை.*

பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் தலைவனாக இருந்த ***பேதுருவைப்*** *பற்றிய காரியம் என்ன? சரித்திர சான்றுகளின்படி இயேசுவைப் போல சிலுவையிலறையப்பட நான் தகுதியற்றவன் என்று பேதுரு கூறியதால் அவருடைய விருப்பத்தின்படியே தலைகீழாகச் சிலுவையிலறையுண்டு மரித்தார்.*

யோவானுடைய *மரணத்தைப் பற்றி நமக்கு எந்த வகையான சான்றுகளும் இல்லை. ஆனால் அவருடைய*

வயோதிப காலத்தில் வறட்சியான, கரடுமுரடான பாறைகள் நிறைந்த பத்மு தீவில் சிறைவாசம் அனுபவித்தார். அங்கு அவருக்குக் கிடைத்த தரிசனங்கள் தான் வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம் பெற்றுள்ளன.

பவுலைப்பற்றி நாம் என்ன அறிகிறோம்? அவரும் அவரைச் சேர்ந்த அப்போஸ்தலரும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதுபற்றி அவரே இவ்வாறு கூறுகிறார்.

> ***இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்.***
>
> ***எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கப்படுகிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்.***
>
> ***தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்.***
> ***(1 கொரிந்தியர் 4:11-13)***

புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை வல்லமையாகவும், அற்புதமான முறையிலும் பிரசங்கித்து முடித்த பின்பு பவுலை ரோம அரசாங்கம் இருண்ட சிறையில் அடைத்தது. தனது உடன் ஊழியர்களால் கைவிடப்பட்டார். பின்னர் அவரை வெளியே கொண்டுவந்து எல்லாருக்கும் முன்பாகச் சிரசை வெட்டிக் கொன்றனர்.

நாம் கவனித்த இயேசு, பேதுரு, யோவான் மற்றும் பவுல் ஆகியோரது வாழ்வின் முடிவைப்

பார்க்கும்போது உண்மைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் இரத்த சாட்சிகளாகத்தான் மரிக்க வேண்டுமா? அல்லது உண்மையான கிறிஸ்தவன் பணக்காரனாக இருக்கக்கூடாதா? அப்படியல்ல! ஆனால் இவைகள் ஒரு முக்கியமான காரியத்தை நினைவூட்டுகிறது: **இந்த உலகம் நம்மை உலகப்பிரகாரமான வெற்றியைப் பார்த்து கவர்ந்து இழுக்க நாம் அனுமதிக்கக் கூடாது. உலக மக்கள் நம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும் என நினைக்கக் கூடாது. புகழடைய வேண்டும் என்ற விருப்பம் மிகவும் ஆபத்தானது.**

இதைக் குறித்து இயேசுவானவர் சில கடுமையான எச்சரிப்புகளைக் கொடுத்துள்ளார்: "...மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது." (லூக்கா 16:15) "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள். (லூக்கா 6:26)

உண்மையான வெற்றிக்கு வழி

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள ஐந்து இராஜாக்களின் முடிவை, புதிய ஏற்பாட்டில் இயேசுவும் அவருடைய சீஷர்களின் முடிவோடு ஒப்பிட்டு அதற்கான வித்தியாசத்தை மனதிற்குள் யோசித்துப்பார்த்தேன். நிலைத்து நிற்கும் வெற்றியைப் பெறுவதற்கான வழி என்ன என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன்.

ஆண்டவர் எனக்கு இரண்டு வசனங்களைக் காட்டினார். முதலாவது வசனம் பவுல் 1 கொரிந்தியர் 7:25ல் இவ்வாறு கூறுகிறார். "நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால்

இரக்கம்பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன்."

உண்மையுள்ளவனாயிருப்பதற்கு நான் முழுவதுமாக கர்த்தருடைய கிருபையைச் சார்ந்திருக்க வேண்டும் என்று கண்டுகொண்டேன். எனது கல்வித் தகுதிகள், எனது ஆவிக்குரிய வரங்கள், எனது பழைய வெற்றிகள், பல்லாண்டு கிறிஸ்தவ ஊழியம் இவைகள் எதன் மீதும் நான் சார்ந்திருக்க முடியாது. **என்னை உண்மையுள்ளவனாகக் காத்துக் கொள்ளும் ஒரே ஒரு காரியம்: தேவனுடைய கிருபை.**

என்னுடைய வாழ்வின் மைய நோக்கமாகக் கொண்டு பொறுப்போடும் தொடர்ச்சியாகவும் சார்ந்திருக்க வேண்டிய காரியம்: தேவனுடைய கிருபை. சார்ந்திருக்கும் எனது தன்மையை குறைக்கவோ அழிக்கவோ செய்யும் எந்த வகையான காரியத்திற்கும் எதிராக நான் கவனமாக விழிப்புடன் இருக்க வேண்டும். குறிப்பாக நான் கவனமாக இருக்கவேண்டிய காரியம் பெருமையாகும். **இந்தப் பெருமை பின்னர் என்னை நானே சார்ந்திருக்கும் சூழ்நிலையில் என்னைக் கொண்டுவந்து சேர்க்கும்.**

இரண்டாவது இயேசுவே யோவான் 4:34ல் கூறுகிறார்: "... நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது". அவரது வாழ்வின் முடிவுபரியந்தம் ஒரே மனதுடன் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதைத் தீர்மானமாகக் கொண்டு செயல்பட்டதே இயேசுவின் வாஞ்சையாயிருந்தது.

எப்பொழுதெல்லாம் தேவன் நம்மை சோதிக்கிறாரோ அப்பொழுதெல்லாம் நமது நிலைமையை நிலை நிறுத்த விரும்புகிறார் என்பதை

நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் சோதனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக்கற்றுக் கொள்வோமென்றால் இயேசுவைப் போல நம்மை அவர் உருவாக்குகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளுவோம். நீங்களும் நானும் எதிர் நோக்குகிற உண்மையான வெற்றி அதுவே.

ஆசிரியரைப்பற்றி. . .

டேரிக் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியருக்குப் பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். 1940 முதல் 1949 வரை கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக் கழகத்திலும் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இந்தச் சந்திப்பினால் என்னால் மாற்றமுடியாத இரண்டு முடிவுகளை மேற்கொண்டேன்: முதலாவது இயேசு ஜீவிக்கிறார். இரண்டாவது வேதாகமம் உண்மையான, பொருத்தமுள்ள

இன்றைய நாளுக்கும் ஏற்ற புத்தகமாகும். இந்த இரண்டு முடிவுகளும் என் வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்கு பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம் எருசலேம் பட்டணமாகும். லிடியா என்பவரை மணந்ததன் மூலம் லிடியாவின் குழந்தைகள் இல்லத்தில் வாழ்ந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக 1948ல் "இஸ்ரவேல்" நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்சும் ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். 1975ல் லிடியாவின் மரணத்திற்குப் பின் 1978ல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். லிடியாவைப் போல் ரூத்தையும் அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் வளர்ப்புப் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரியதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத பண்டிதராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். 'இன்றைக்கு டெரிக் பிரின்சுடன்' (**Today with Derek Prince**) என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் செல்கின்றது. இங்கு உள்ள மக்கள் பேசும் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ்,

ஸ்வேடோ,) மங்கோலியன், ஸ்பானிஷ், ரஷ்யன், டோங்கன் ஆகிய மொழிகளில் கேட்கின்றனர். இவர் 30 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவைகள் ஐம்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உலகளாவிய தலைவர்களின் அமைப்பு' (Global Outreach Leaders Programme) என்ற டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவது உலக நாடுகள், கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப் படுகின்றன.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியா மற்றும் பிரிட்டனில் அமைந்துள்ளன.

*2003*ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எருசலேம் பட்டணத்தில் வைத்து டெரிக் பிரின்ஸ் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

Other Tamil Books by Derek Prince

1) தேவனின் மருந்து புட்டி Rs. 20/-
2) உங்களில் உள்ள தூய ஆவியானவர் Rs. 25/-
3) தெய்வீகப் பரிமாற்றம் Rs. 5/-
4) சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல் Rs. 35/-
5) ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: நீ தெரிந்து கொள்ளலாம் Rs. 75/-
6) வாழ்வளிக்கும் விசுவாசம் Rs. 50/-
7) அவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்கள் Rs. 80/-
8) ஆவிக்குரிய போராட்டம் Rs. 25/-
9) ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல் Rs. 20/-
10) அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் Rs. 20/-
11) சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள் Rs. 40/-

மற்றும் எங்களிடம் ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, நேபாளி போன்ற புத்தகங்களும் உள்ளன. பட்டியலுக்கு தொடர்பு கொள்ளவும்:

Write for a free catalogue of books, teaching tapes and Videos by:

DEREK PRINCE MINISTRIES - INDIA,
18/32, MANGAMMAL SALAI,
RENGA NAGAR,
TRICHY - 620 021,
TAMIL NADU, S. INDIA.
PHONE: 00-91-431-2459464 / 2459664
FAX: 00-91-431-2459564
E-MAIL: r_m_c@vsnl.com